**சமுர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி நிதியம் - 2025**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

சமுர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களானது நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தினை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகள் என்பவற்றை வெளிப்படுத்துதல் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும்

நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் உரிய செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்ட உடன் முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டின் போது பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணத்தில் ரூபா 50,130 மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டு தொடர்பாக ரூபா 50,130 இல் ரூபா 23,180 திணைக்களத்தின் திரண்ட நிதியத்திற்கும் ரூபா 26,950 சம்பள கணக்கிற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இப்பணம் முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்காக சமூக அபிவிருத்தி நிதியத்திற்கு கிடைக்காததனால் இன்னும் கிடைக்க வேண்டிய முற்பணமாக பதியப்பட்டுள்ளது என குறிப்பிடுகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணங்களை தீர்த்துவைக்கும் உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான நிலைமை ஏற்படாமைக்குமான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். |

### 1.5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சேசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 381(1) | 2017 ஆம் ஆண்டிலிருந்து நிதியத்திற்காக ஒரு நடைமுறைக் கணக்கு பேணப்பட்டிருந்தும் இந்த அறிக்கைத் திகதி வரை அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நடைமுறைக்கணக்கிற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாமைக்கான காரணத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கும் தேவையான அங்கீகாரத்தினை துரிதமாக பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1)(இ) | மீளாய்வாண்டிற்கான பாதீடு அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்துடன் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்து அதன் பிரதியை அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டிற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய பாதீட்டு பணிப்பாளருக்கும் அதன் பிரதியை அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்திற்கும் அனுப்புவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை எடுக்காமையால் இந்த நிலைமை உருவாகியுள்ளது. | அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்காமைக்கான காரணத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டியதுடன் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான நிலைமை ஏற்படாமைக்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,832,924 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 12,571,739 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 4,738,815 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,719,230 தொகையான சமூக தொடர்பு விழா செலவுகள் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் பிரதான வருமான மூலமான கொடி விற்பனையிலிருந்து 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 23,077,572, ரூபா 16,972,559 மற்றும் ரூபா 15,731,926 வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க கொடி விற்பனை வருமானம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டமையால் நிதியத்தின் நிதி ஸ்திரத்தன்மைக்கு பாதகமான தாக்க நிலைமை காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டில் கொடி வருமானம் குறைவடைந்தமையினை திருப்திகரமான நிலைமைக்கு அதிகரிப்பதற்கான இயலுமை கிடைத்துள்ளது. 2026 ஆம் ஆண்டின் போது ஆண்டிற்கான கொடி வருமானத்தினை இன்னும் அதிகரிக்கச் செய்வதற்காக தேவையான நடவடிக்கையை அடையாளம் கண்டு அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் மூலம் நிதியை அதிகரிக்கும் சவாலினை வெற்றிகொள்ளலாம் என நான் நம்புகிறேன். | பிரதான வருமானம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைவதற்கான காரணத்தை அடையாளம்கண்டு வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினமாகிய மே 31 ஆந் திகதிக்கு இணைவாக சமுர்த்தி நலன்பெறுனர்களுக்கும் மக்களுக்கும் கொடி மற்றும் ஸ்டிக்கர்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 10 சதவீதத்தினை நிதியத்திற்கு செலவு வைப்பதுடன் வருமானத்தில் 90 சதவீதம் உச்ச அளவிற்கு உட்பட்டு அங்கீகரித்த செயற்திட்டங்களுக்காக பணம் செலவு செய்யப்படுதல் வேண்டும். அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது கொடி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து கிடைத்த ரூபா 157,319,268 தொகையான மொத்த வருமானத்தில் 10 சதவீதம் அதாவது ரூபா 15,731,926 நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 90 சதவீதமான ரூபா 141,587,341 பணத்தில் மீளாய்வாண்டில் செலவு வைக்கப்பட்டிருந்தது ரூபா 78,529,480 மாத்திரமாகும். | ஒட்டுமொத்த கொடி வருமானத்தில் சமூக அபிவிருத்தி நிதியத்திற்கு செலவுவைக்கப்பட்டுள்ள 10% பணம் ரூபா 15.73 மில்லியனாகும். கொடி வருமானத்தில் 90% ஆன மிகுதிப் பணமாகிய ரூபா 141.59 மில்லியனில் அந்த அந்த சமூக அடிப்படையிலான அமைப்புக்களினால் தங்களிடமுள்ள பணத்தின் அளவின் அடிப்படையில் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கிணங்க பொதுவாக அடையாளம் காணக்கூடிய 07 நிகழ்சித்திட்டங்களும் ஏனைய அதிக அளவான நிகழ்சித்திட்டங்களும் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கிணங்க ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்டங்களுக்குமாக செலவு செய்யப்பட்டுள்ள பணம் ரூபா 78.53 மில்லியனாகும். மேலும் | கொடி வருமான நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கும் அது சம்பந்தமாக தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் கொடி விற்பனை வருமானங்களின் முழுமையான மற்று ம் சரியான தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் கொடிகளை வழங்குதல், விற்பனைகள் மற்றும் வருமானங்களை சேகரித்தல் சம்பந்தமாக முறையான கடப்பாடுகள் மற்றும் அறிக்கையிடல் நடைமுறையை ஸ்தாபித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கிணங்க ரூபா 63,057,861 பணம் இன்னும் மிகுதியாகக் காணப்பட்டதுடன் அப்பணத்தை வினைத்திறனாக பயன்படுத்துவது தொடர்பாக முகாமைத்துவத்தினால் போதியளவு பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் கொடியில் நிர்ணயிக்கப்பட்ட பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்காததுடன் வருமானத்தின் முழுமைத்தன்மை மற்றும் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக போதியளவான கட்டுப்பாட்டு நடைமுறை பேணப்பட்டிருக்கவில்லை. | மிகுதிப் பணத்தை பயன்படுத்தி அடுத்துவரும் கொடி தினம் வரை நிகழ்சீத்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படும். அதற்கிணங்க கொடி வருமானத்திற்கு ஏற்ப முடியுமான உச்ச அளவில் நிகழ்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படும்.<br><br>ஒரு கொடியின் பெறுமதியை உறுதியாக குறிப்பிடப்படாமைக்கான காரணமாவது பல்வேறு மட்டத்தில் சமூக உதவியினை வழங்குவதன் மூலம் சேகரிக்கப்படும் வருமானமானது கொடியின் விலையை குறிப்பிடுவதன் அடிப்படையில் மட்டுப்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு உள்ளதனாலாகும். | |
| (இ) | நிதியத்தின் நியதிச் சட்டத்திற்காக திறைசேரியின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் நிதியத்திலிருந்து மேற்கொள்ளக்கூடிய கொடுப்பனவுகள் மற்றும் நிதியத்தின் பயன்பாடு தொடர்பான ஒழுங்கு விதிகளும் நியதிச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் நியதிச்சட்டத்திற்காக திறைசேரியின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் சமூர்த்தி தேசிய சபையின் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல் மாத்திரம் இடம்பெற்றுள்ளது. | நிதியத்தின் நியதிச் சட்டமானது உரிய ஒழுங்கு விதியினை உள்ளடக்கும் வகையில் முறைப்படியாக தயாரித்து திறைசேரியின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை தலைப்பாகக் கொண்டு அமுல்படுத்தப்படுகின்ற கொடி நிகழ்சித்திட்டங்களின் மூலம் சேகரிக்கப்படுகின்ற பணத்தில் 90 சதவீதம் உரிய பிரதேசத்திலுள்ள அமைப்புக்களின் கணக்குகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் மிகுதியான 10 சதவீதம் நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அந்த 10 சதவீத பங்களிப்பில் பேணப்படுகின்ற நிதியத்தின் குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகளை நிதியத்தின் நியதிச்சட்டத்தில் தெளிவாகவும் தனியாகவும் அடையாளம் காணக்கூடிய | திணைக்களத்தின் நிதியத்தை புதுப்பிப்பதற்காக பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட குழு அறிக்கையின் சிபாரிசு மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்க சமூர்த்தி தேசிய அபிவிருத்தி நியதித்தின் நியதிச்சட்டமானது 10% மற்றும் 90% இற்காக தனித்தனியான குறிக்கோள் மற்றும் செயற்பாடுகளை உள்ளடக்கி திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. | 10 சதவீத பங்களிப்பில் பேணப்பட்டு வருகின்ற நிதியத்தின் குறிக்கோள்களையும் செயற்பாடுகளையும் தெளிவாக வரையறுத்து அவற்றினை நிதியத்தின் நியதிச்சட்டத்திற்கு உள்ளடக்கும் வகையில் நியதிச்சட்டத்தினை முறைப்படியாக திருத்தம் செய்தல் வேண்டும். மேலும் அக்குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நிதியத்தின் நடவடிக்கைகளைப் பேணுவதற்காக தேவையான கட்டுப்பாட்டு மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகள் |

| | | | |
|---|---|---|---|
| | வகையில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் அக்குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை முறைமைப்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு செய்வதற்காக தேவையான கட்டுபாட்டு மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகள் போதிய அளவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | | ஸ்தாபிக்கப்பட்டு அந்த நடவடிக்கைகளை முறைப்படியாக கண்காணிப்பு செய்தல் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (உ) | 2025 செப்தெம்பர் 04 ஆந் திகதிய அமைப/25/1531/804/179 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட 2024 இன் 44 ஆம் இலக்க அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் VIII ஆம் பகுதியின் 39 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட நியதிச்சட்டமற்ற நிதியம் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக நியமிக்கப்பட்ட நிதிய மீளாய்வு குழுவின் 2025 யூலை 02 ஆந் திகதிய அறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் இந்த நிதியம் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு நிதியமாக அடையாளம் காணப்பட்டிருந்தது. அதற்கிணங்க சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் அந்த ஆலோசனைக்கிணங்க நிதியத்தின் எதிர்கால இருத்தல் சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும் அது தொடர்பான சட்டரீதியான நடவடிக்கைகளும் இவ்வறிக்கைத் திகதி வரை முடிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டமா அதிபரிடம் விசாரித்து உரிய தீர்மானம் கிடைத்துள்ளதுடன் இது தொடர்பாக அரசாங்க நிதி திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. திணைக்களத்தின் இந்த நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்காக திணைக்களத்தின் கணக்காய்வு முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடப்பட்டவாறு நியமிக்கப்பட்ட விசேட குழுவின் மூலம் இந்த நிதியம் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | 2024 இன் 44 ஆம் இலக்க அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் பிரகாரம் உரிய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள கால எல்லை முடிவடைந்துள்ளதனால் சட்டமா அதிபரின் ஆலோசனை மற்றும் உரிய சட்டரீதியான தேவைப்பாடுகளை கவனத்தில் கொண்டு இந்நிதியம் சம்பந்தமாக எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகளை துரிதமாக முடிவு செய்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|

இலங்கை சமூர்த்தி ஒவ்வொரு சமூக அடிப்படை நிதியத்தின் நியதிச் அதிகாரசபையின் 178 ஆவது அமைப்புக்கள் மற்றும் பிரதேச சட்டத்தில் குறிப்பிட்ட

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் 2009 மார்ச் 16 ஆந் திகதிய 05/2009 ஆம் இலக்க சபைப் பத்திரத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதியத்தின் புதிய நியதிச்சட்டத்தில் குறிப்பிட்ட 16 குறிக்கோள்களுக்கு மத்தியில் 10 குறிக்கோள்களை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது தேவையான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அமைப்புக்களினால் குறிப்பிடப்பட்டுள்ள 16 குறிக்கோள்களை உள்ளடக்கும் வகையில் தேவைப்பாடு மற்றும் முன்னுரிமைக்கு இணங்க செயற்திட்டங்களை தெரிவுசெய்தலும் அங்கீகாரத்தினை வழங்குதலும் மற்றும் அமுல்ப்படுத்துதலும் அந்த அந்த சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் நிறைவேற்று சபையினால் மேற்கொள்ளப்படும். நிதியத்தில் காணப்படுகின்ற நிதியின் அளவானது அங்கத்தவர்களின் வேண்டுதல்களின் வினைத்திறனுக்கு இணங்கவும் அந்த அந்த பிரதேசத்திற்கு இணங்கவும் வேறுபடுவதனால் இந்த நிலைமையானது மாவட்டம் அல்லது அமைப்பாக குறிக்கோள்கள் அனைத்தையும் நிறைவேற்றக்கூடிய வகையில் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துதல் இடம்பெற்றிருக்கலாம். எனினும் நாடு முழுவதிலும் அமுல்ப்படுத்தப்பட்ட நிகழ்சித்திட்டங்களின் மூலம் இக்குறிக்கோள்களில் பல நிறைவேற்றப்பட்டுள்ளது என குறிப்பிடுகிறேன். | அனைத்து குறிக்கோள்களையும் உள்ளடக்கும் வகையில் தேவைப்பாடுகளையும் முன்னுரிமைகளையும் அடையாளங்கண்டு செயற்திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| நிதியத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக 12 நிகழ்சித்திட்டங்கள்/ செயற்பாடுகளுக்காக ரூபா 56,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 29,100,000 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அது ஒதுக்கீடு செய்த நிதி செயற்பாட்டில் 52 சதவீதம் மாத்திரமாகும். அதற்கிணங்க அங்கீகரித்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க ஒதுக்கீடுசெய்த நிதி ஏற்பாட்டில் குறிப்பிடத்தக்க அளவானவை மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரித்த திட்டத்தின் சில நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது முறைப்படியான நிதி முகாமைத்துவத்தையும் முறைப்படியான பெறுகை நடைமுறையையும் பின்பற்றுவதன் மூலம் செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவுகளை குறைத்ததன் பின்னர் மிகுதியான பண மீதியும் தாக்கமளித்திருந்தது. | நிதியத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக நடைமுறைச்சாத்தியமான நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்து ஒதுக்கீடு செய்த நிதியை ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |